## DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

**Name of the Test:**

| | |
|---|---|
| Forest Department Test – Fundamental Rules of Tamil Nadu Government, Tamil Nadu State Service Rules etc., (With Books) | 121 |

Maximum Time: 2.30 Hour Maximum Marks: 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

1. What is the maximum number of casual leave days that a Government servant can avail in a calendar year under the Fundamental Rules?
அடிப்படை விதிகளின்படி, ஒரு ஆண்டில் அரசு ஊழியருக்கு வழங்கப்படும் அதிகபட்ச தற்செயல் விடுப்பு நாட்கள் எவ்வளவு?

(A) 10 days
10 நாட்கள்

(B) 15 days
15 நாட்கள்

(C) 12 days
12 நாட்கள்

(D) 20 days
20 நாட்கள்

2. If a Government Servant transferred from one station to another station, what is the preparation time allowed?
ஒரு அரசு ஊழியருக்கு இட மாறுதலை தொடர்ந்து புதிய இடத்தில் பணி ஏற்க வழங்கப்படும் தயாரிப்பு காலம் _________ நாட்கள்?

(A) 5 Days
5 நாட்கள்

(B) 6 Days
6 நாட்கள்

(C) 7 Days
7 நாட்கள்

(D) 30 Days
30 நாட்கள்

3. "A" and "B" Government Servant is appointed to hold full additional charge of a post, additional pay shall be allowed only if the period of additional charge is more than days.
"அ" மற்றும் "ஆ" பிரிவு அலுவலர்கள் _________ நாட்களுக்கு மேல் முழு கூடுதல் பொறுப்பாக பணி புரிந்ததால் கூடுதல் பொறுப்புப்படி அனுமதிக்கப்படுகிறது.

(A) 49 Days
49 நாட்கள்

(B) 30 Days
30 நாட்கள்

(C) 39 Days
39 நாட்கள்

(D) 40 Days
40 நாட்கள்

4. The study leave shall be granted for an Officer after completing _________ years of service
_________ ஆண்டுகள் பணிமுடித்த அரசுப் பணியாளருக்கு உயர்கல்வி விடுப்பு (Study Leave) அனுமதிக்கப்படுகிறது.

(A) 1 Year
1 ஆண்டு

(B) 2 Years
2 ஆண்டுகள்

(C) 5 Years
5 ஆண்டுகள்

(D) 4 Years
4 ஆண்டுகள்

5. Advance Credit for Earned Leave shall be render after completion of ________ year in Basic Service.
அடிப்படைப்பணியில் ஈட்டிய விடுப்பு முன்வரவுக்கு தகுதி பெற எத்தனை ஆண்டுகள் பணிபுரிய வேண்டும்?

(A) 1 Year
1 ஆண்டு

(B) 2 Years
2 ஆண்டுகள்

(C) 4 Years
4 ஆண்டுகள்

(D) 5 Years
5 ஆண்டுகள்

6. A Government Servant on superior service completing 10 years of service may be sanctioned leave on private affairs for
10 ஆண்டுகள் பணி முடித்த ஓர் உயர் நிலை பணியாளருக்கு வழங்கப்படும் சொந்த அலுவலுக்கான ஈட்டா விடுப்பு.

(A) 180 days
180 நாட்கள்

(B) 60 days
60 நாட்கள்

(C) 90 days
90 நாட்கள்

(D) 30 days
30 நாட்கள்

7. A Government Servant who avail Unearned Leave on Medical Certificate for periods exceeding ________ days should obtain Medical Board recommendations.
ஒரு அரசு ஊழியர் மருத்துவச் சான்றுடன் கூடிய ஈட்டா விடுப்பு நாட்களுக்கு மேல் எடுத்தால் மருத்துவ குழுவின் பரிந்துரையை பெற வேண்டும்.

(A) 59 days
59 நாட்கள்

(B) 60 days
60 நாட்கள்

(C) 15 days
15 நாட்கள்

(D) 45 days
45 நாட்கள்

8. The House Rent Allowance is admissible to Government Servant under suspension at the rate of ________ % of last pay drawn before suspension.
தற்காலிக பணி நீக்கத்தில் உள்ள அரசு பணியாளருக்கு வீட்டு வாடகைப்படி கடைசியாக பெற்ற ஊதியத்திலிருந்து எத்தனை சதவீதம் வழங்கப்பட வேண்டும்?

(A) 50%

(B) 100%

(C) 70%

(D) 60%

9. To get voluntary retirement one should complete the age of
தன் விருப்ப ஓய்வில் சென்றிட பணியாளர் நிறைவு செய்திருக்க வேண்டிய வயது

(A) 40 years
40 ஆண்டுகள்

(B) 50 years
50 ஆண்டுகள்

(C) 55 years
55 ஆண்டுகள்

(D) 58 years
58 ஆண்டுகள்

10. The Fundamental Rules shall come in to force with effect from 1st January
அடிப்படை விதிகள் ________ ஜனவரி 1 முதல் அமலுக்கு வந்தது.

(A) 1922

(B) 1923

(C) 1924

(D) 1925

11. Under Fundamental Rules, all Government Servants paid from the
அடிப்படை விதியின்படி அரசு ஊழியருக்கு ________ நிதியிலிருந்து ஊதியம் வழங்கப்படுகிறது.

(A) Common Fund
பொது நிதி

(B) Public Fund
மக்கள் நிதி

(C) Contingency Fund
பலயின நிதி

(D) Consolidated Fund
ஒருங்கிணைந்த நிதி

12. When a Government Servant has compulsorily to wait for orders of posting, such period of waiting shall be treated as
ஒரு அரசு பணியாளர் பணி நியமன ஆணைக்காக கட்டாயமாகக் காத்திருக்க நேரும் போது அந்த கட்டாய காத்திருப்பு காலம் என்பது

(A) Duty period
பணிக்காலம்

(B) Leave period
விடுப்பு காலம்

(C) Punishment period
தண்டனை காலம்

(D) Waiting period
ஓய்வு காலம்

13. A Government Servant who receives substantive or officiating pay with the sanction of Government from any source other than the Consolidated Fund is called
ஒரு அரசு ஊழியர் அரசின் ஒப்புதலுடன் ஒருங்கிணைப்பு நிதிகளில் இருந்து அல்லாமல் வேறு வழியில் ஊதியம் பெறும் பணி என்பது

(A) Permanent Service
நிரந்தர பணி

(B) Temporary Service
தற்காலிக பணி

(C) Foreign Service
அயல் பணி

(D) Deputation
மாற்றுப்பணி

14. Special Pay shall be granted for the following
சிறப்பு ஊதியம் கீழ்காணும் சிறப்பு காரணங்களுக்காக வழங்கப்படுகிறது.

(A) The Specially arduous nature of the duties
மிகவும் கடினமான பணிகள் செய்ய நேரிடுதல்

(B) A specific addition to the work or responsibility
வேலையுடன் (அ) பொறுப்புடன் கூடுதலான குறிப்பிட்ட பணி

(C) Personal qualification in exceptional circumtances
தவிர்க்க இயலாத சூழ்நிலையில் பணிபுரிபவரின் தகுதி அடிப்படையில்

(D) All the above
இவை அனைத்தும்

15. Under the Tamil Nadu Civil Service (Discipline and Appeal) Rules 17(e), a Government Servant who is detained in custody on police for longer than _________ hours should be deemed to have been under suspension.
தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதிகள் 17 (e)-இன் கீழ் ஒரு அரசு பணியாளர் எத்தனை மணி நேரத்திற்கு மேல் நீதிமன்ற அல்லது காவல் துறை காவலில் இருப்பாரேயானால், அவர் தற்காலிக பணி நீக்கத்தில் இருந்ததாக கருதப்படுவார்?

(A) 24 hours
24 மணி நேரம்

(B) 48 hours
48 மணி நேரம்

(C) 72 hours
72 மணி நேரம்

(D) 12 hours
12 மணி நேரம்

16. The Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules shall come into force on
தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதிகள் எந்த தேதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது?

(A) 31st January 1955
31 ஜனவரி 1955

(B) 31st December 1955
31 டிசம்பர் 1955

(C) 1st December 1955
1 டிசம்பர் 1955

(D) 1st January 1955
1 ஜனவரி 1955

17. Which one of the following are treated as major penalties?
கீழ்கண்டவற்றில் எது பெருந்தண்டனையாக கருதப்படுகிறது?

(A) Censure
கண்டனம்

(B) Suspension
தற்காலிக பணிநீக்கம்

(C) Withholding promotion or increment
பதவி உயர்வு அல்லது ஊதிய உயர்வை நிறுத்தி வைத்தல்

(D) Compulsory Retirement
கட்டாய ஓய்வு

18. The Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules under section 17 (a), Disciplinary Authority refers to
தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதிகள் 17 (a)-இன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை அலுவலர் என்பவர்

(A) Any officer in the department
துறையிலுள்ள எந்த அதிகாரியும்

(B) Any authority superior to the accused officer
குற்றம் சாட்டப்பட்ட அலுவலருக்கு உடனடி உயர் அலுவலர்

(C) The authority competent to impose the penalties and superior to the accused officer
குற்றம் சாட்டப்பட்ட அலுவலருக்கு உடனடி உயர் அலுவலர் மற்றும் தண்டனை வழங்கும் அதிகாரம் பெற்றவர்

(D) Chief Secretary
தலைமை செயலாளர்

19. How should an order or notice to be served under the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules, if the person is not found?
தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதிகளின் கீழ் வழங்கப்பட்ட ஆணை அல்லது அறிவிப்பை குற்றம் சாட்டப்பட்ட அலுவலர் தொடர்பு கொள்ள இயலாத நிலையில் (not found), அவருக்கு எவ்வாறு தெரிவிக்க வேண்டும்?

(A) By email

மின்னஞ்சல் மூலமாக

(B) Through SMS
குறுஞ்செய்தி மூலமாக

(C) By affixing it in a conspicuous part of the last known place of residence
குற்றம் சாட்டப்பட்ட அலுவலர் இறுதியாக வசித்த இடத்தில் வெளிப்படையாக ஏதாவதொரு இடத்தில் ஒட்டுவதன் மூலமாக

(D) By publishing it in a newspaper
செய்தித்தாள் மூலமாக

20. As per section 9, of sexual harrassment of women at working place (prevention, prohibition and redressal) Act 2013 time limit for filing complaint.
பிரிவு 9 ன் படி, பணியிடத்தில் பெண்களுக்கான பாலியல் தொல்லை (தடுப்பு, தடை, நிவாரணம்) சட்டம் 2013 ன் படி புகார் அளிப்பதற்கான கால வரம்பு.

(A) Three month from the incident

சம்பவம் நடந்த தேதியிலிருந்து மூன்று மாதங்கள்

(B) 15 days from the incident
சம்பவம் நடந்த தேதியிலிருந்து 15 நாட்கள்

(C) Six months from the incident
சம்பவம் நடந்த தேதியின்று ஆறு மாதங்கள்

(D) One year from the incident
ஒரு வருடங்கள் சம்பவம் நடந்த நாளிலிருந்து

21. Who is entitled to appeal under the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rule 19?
தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதிகள் 19-இன் கீழ் மேல்முறையீடு செய்ய தகுதியான அலுவலர்?

(A) Only permanent Government Servants
நிரந்தர அரசுப்பணியாளர்கள் மட்டும்

(B) Only temporary employees
தற்காலிக பணியாளர்கள் மட்டும்

(C) Every Government servant, including those who have cease to be in service
சேவையில் இல்லாதவர்களையும் உள்ளடக்கிய அனைத்து அரசுப் பணியாளர்களையும்

(D) Only contract employees
ஒப்பந்த பணியாளர்கள் மட்டும்

22. Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules, who has the power to review any order passed under these rules?
தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதியின் கீழ் வழங்கப்பட்ட ஆணையினை மறு ஆய்வு செய்யும் அதிகாரம் பெற்றவர்?

(A) Tamil Nadu Public Service Commission
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

(B) The Honourable High Court
மாண்புமிகு உயர்நீதிமன்றம்

(C) State Government
மாநில அரசு

(D) Head of Department
துறைத் தலைவர்

23. As per the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules, the State Government may review an order passed under these rules:
தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதியின் கீழ் வழங்கப்பட்ட ஆணையினை அரசு எப்போது பார்வையிடலாம்?

(A) Within 15 days
15 நாட்களுக்குள்

(B) Within 30 days
30 நாட்களுக்குள்

(C) At any time
எந்த நேரத்திலும்

(D) After court approval
நீதிமன்றம் ஆணைக்கு பிறகு

24. Under the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules, the penalties of compulsory retirement, removal and dismissal may be imposed for violation of which rule of the Tamil Nadu Government Servants' Conduct Rules, 1973?
தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதியின் படி, கட்டாய ஓய்வு, நீக்கம் மற்றும் பணி நீக்கம் போன்ற தண்டனைகள், 1973 சட்ட ஒழுங்கு விதிகளின் எந்த விதியை மீறியதற்காக விதிக்கப்படலாம்?

(A) Rule 8
விதி 8

(B) Rule 14
விதி 14

(C) Rule 17
விதி 17

(D) Rule 19
விதி 19

25. Which of the following is not a penalty listed under the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rule 14(a)(1)?
கீழ்கண்டவற்றில் எது தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதி 14(a)(1)-ன் கீழ் தண்டனையாக கருதப்படாது?

(A) Censure
கண்டனம்

(B) Reduction of increment
சம்பள உயர்வு நிறுத்தம்

(C) Transfer
பணி மாற்றல்

(D) Recovery from pay of pecuniary loss
நிதி இழப்பீட்டை சரிசெய்ய சம்பளத்தில் இருந்து பிடித்தம் செய்தல்

26. Who is the authority competent to impose: minor penalties like censure, fine, withholding of increments on a member of the Subordinate Service under the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules?
தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதியின் படி, சார்நிலைப்பணியாளர்களுக்கு சிறு தண்டனைகளை (கண்டனம், அபராதம், ஊக்கத்தை நிறுத்துதல்) விதிக்க தகுதி உள்ளவர் யார்?

(A) Any officer in the department
துறையின் எந்தவொரு அதிகாரியும்

(B) His immediate superior officer of the State Services/Central service
அவரது உடனடி மாநில உயர் அலுவலர்/மத்திய உயர் அலுவலர்

(C) The High Court
உயர்நீதிமன்றம்

(D) Tamil Nadu Public Service Commission
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

27. If a Government servant is promoted or transferred to another grade, or service, who can impose a penalty for his earlier conduct under the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rule 15(a)?
ஒரு அரசு ஊழியர், பதவி உயர்வு அல்லது மாற்றம் செய்யப்பட்ட பின்னர், கடந்த கால தவறுக்கான தண்டனையை தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) 15(a) விதியின்படி, யார் விதிக்கலாம்?

(A) The authority from his previous post
முந்தைய பதவியின் அலுவலர்

(B) The authority competent in the new grade or service
புதிய பதவிக்கான தண்டனை விதிக்கத் தகுதியுள்ள அலுவலர்

(C) Any officer senior to him
எந்தவொரு மூத்த அலுவலரும்

(D) Tamil Nadu Public Service Commission
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

28. Who is deemed to be the inquiring authority in cases involving complaints of sexual harassment under Rule 20-B of the Tamil Nadu Government Servant Conduct Rules 1973?
தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) 1973 விதியின்படி, பாலியல் தொல்லை விசாரணையில் விதி 20-B யின் கீழ் விசாரணை அலுவலர் யார் எனக் கருதப்படுகிறார்?

(A) The disciplinary authority
ஒழுங்கு நடவடிக்கை அலுவலர்

(B) The Director of Women's Welfare
மகளிர் நலத்துறை இயக்குநர்

(C) Internal complaint committee
பாலியல் தொல்லை விசாரணைக்கான உள்புகார் குழு

(D) The Tamil Nadu Public Service Commission
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணயம்

29. When a member of a service is selected by direct recruitment to another government/quasi-government organization, for how long can he retain his service rights in the former service under section 14 of the Tamil Nadu Government Servants (Conditions of Services) Act, 2016?
விதி 14 ன் கீழ் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-இன்படி ஒரு அரசு/அரசு சாரா நிறுவனத்தில் நேரடி நியமனத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு அரசு ஊழியர், முன் இருந்த பணியிலான பணி உரிமையை எவ்வளவு காலத்திற்குள் வைத்திருக்க முடியும்?

(A) 6 months
6 மாதங்கள்

(B) 1 year
1 வருடம்

(C) 2 years
2 ஆண்டுகள்

(D) Until retirement
ஓய்வு பெறும் வரை

30. Time period for unduting formal inquiring in to a sexual harassment complaint by local complaint committee is
பெண்களுக்கான பணியிடத்தில் பாலியல் தொல்லை புகார் மீதான விசாரிக்க வேண்டிய கால அவகாசம்.

(A) Ten days
பத்து நாட்கள்

(B) 6 month
ஆறு மாதம்

(C) 90 days
90 நாட்கள்

(D) One year
ஒரு வருடம்

31. As per the Tamil Nadu Government Servants Conditions of Services Act 2016, section 26(1), who shall be appointed to posts in institutions or establishments specially provided for women?
தமிழ்நாடு அரசு ஊழியர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, 26(1)-இன் படி, பெண்களுக்கு மட்டும் ஏற்பாடு செய்யப்பட்ட நிறுவனங்களில் உள்ள பணியிடங்களில் யார் நியமிக்கப்படுவர்?

(A) Men only
ஆண்கள் மட்டுமே

(B) Both men and women
ஆண்களும் பெண்களும்

(C) Women alone
பெண்கள் மட்டுமே

(D) Preference for men
ஆண்களுக்கு முன்னுரிமை

32. What is the minimum percentage of vacancies reserved for women candidates in direct recruitment under the Tamil Nadu Government Servants Conditions of Services Act 2016?
தமிழ்நாடு அரசு ஊழியர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-இன்படி, நேரடி நியமனத்தில் பெண்களுக்கு குறைந்தபட்சமாக எத்தனை சதவீத இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன?

(A) 20%
(B) 25%
(C) 30%
(D) 35%

33. What percentage of vacancies is reserved for destitute widows in posts with pay not exceeding Level 10 under the Tamil Nadu Government Servants (Conditions of Services) Act 2016?
தமிழ்நாடு அரசு ஊழியர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-இன் படி ஊதிய நிலை 10-ஐ விட குறைந்த ஊதியமுள்ள பணிகளில் ஆதரவற்ற விதவைகளுக்கு எத்தனை சதவீத இடம் ஒதுக்கப்பட்டுள்ளது?

(A) 5%
(B) 10%
(C) 15%
(D) 20%

34. As per the Tamil Nadu Government Servants (Conditions of Services) Act 2016, a probationer is required to acquire any special qualification or pass a prescribed test, when shall the second increment be sanctioned?
தமிழ்நாடு அரசு ஊழியர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-இன்படி, ஒரு அரசுப் பணியாளர் தகுதிகாண் பருவ காலத்தில் உரிய தேர்வில் தேர்ச்சி பெற வேண்டின், இரண்டாவது ஊதிய உயர்வு எப்போது வழங்கப்படும்?

(A) Immediately after the appointment
நியமனம் உடனே

(B) After 6 months
6 மாதத்திற்கு பின்

(C) After completion of probation
முயற்சி காலம் முடிந்ததும்

(D) After acquiring the probation and passing the test
தகுதிகாண் பருவம் மற்றும் தேர்வில் தேர்ச்சி பெற்ற பின்

35. What is the maximum period a probationer can remain on duty after the expiry of the prescribed probation period under the provisions of the Tamil Nadu Government Servants Conditions of Services Act 2016?
தமிழ்நாடு அரசு ஊழியர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-இன்படி, தகுதிகாண் பருவம் முடிக்காத அரசுப்பணியாளர் வரையறை செய்யப்பட்ட தகுதிகாண் பருவ காலத்திற்கு பிறகு பணியில் இருக்கக்கூடிய அதிகபட்ச காலம் என்ன?

(A) 1 year
1 ஆண்டு

(B) 2 years
2 ஆண்டுகள்

(C) 3 years
3 ஆண்டுகள்

(D) 5 years
5 ஆண்டுகள்

36. Special casual leave can be given to following circumstances.
எந்த சூழ்நிலைகளில், சிறப்பு தற்செயல் விடுப்பு அளிக்கபடுகிறது.

(A) 10 days for chemotherapy to cancer treatment
10 நாட்கள் கீமோ தெரபி எனும் புற்று நோய் சிகிச்சைக்கு

(B) 30 days for heart diseases
30 நாட்கள் இதய நோய் சிகிச்சை

(C) 7 days for viral fever
7 நாட்கள் வைரஸ் காய்ச்சல்

(D) 10 days for physiological stress
10 நாட்கள் மன உளைச்சல் தொடர்பான

37. Under the provisions of the Tamil Nadu Government Servants Conditions of Services Act 2016. During the extension of service after superannuating, a Government servant:
தமிழ்நாடு அரசு ஊழியர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-இன்படி, ஓய்வு பெற்ற பின் பணி நீட்டிப்பில் இருக்கும் அரசு ஊழியருக்கு

(A) Can be promoted if there is a vacancy
காலியிடம் இருந்தால் பதவி உயர்வு பெறலாம்

(B) Shall not be considered for a higher category appointment
உயர் பதவிக்கு பரிசீலனை செய்யப்படக்கூடாது

(C) Can be transferred to any department
வேறு துறைக்கு மாற்றப்படலாம்

(D) Can be considered for an honorary post
கௌரவ பதவிக்கு பரிசீலிக்கலாம்

38. What is the minimum notice period required for resignation by a Government servant under the provisions of the Tamil Nadu Government Servants Conditions of Services Act 2016?
தமிழ்நாடு அரசு ஊழியர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-இன்படி, ஒரு அரசு ஊழியர் ராஜினாமா செய்ய குறைந்தபட்சமாக எவ்வளவு நோட்டீஸ் காலம் தேவை?

(A) One month
ஒரு மாதம்

(B) Two months
இரண்டு மாதங்கள்

(C) Three months
மூன்று மாதங்கள்

(D) Six months
ஆறு மாதங்கள்

39. Until when can a Government servant withdraw their resignation under the provisions of the Tamil Nadu Government Servants Conditions of Services Act 2016?
தமிழ்நாடு அரசு ஊழியர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-இன்படி, ஒரு அரசு ஊழியர் தனது பதவி விலகல் கடிதத்தை எப்போது வரை திரும்பப்பெறலாம்?

(A) Before a relieving order is issued
விடுவிப்பு உத்தரவு வெளியாவதற்கு முன்

(B) Before the three months expire
மூன்று மாதங்கள் முடிவதற்கு முன்

(C) Before it is accepted by the appointing authority
நியமன அலுவலர் ஏற்கும் முன்

(D) After joining another service
வேறு சேவையில் சேர்ந்த பின்

40. Who is appointing authority of forester as per the Tamil Nadu forest code?
தமிழ்நாடு வன விதிபடி வனவரை நியமிக்கும் அதிகாரம் படைத்த அலுவலர் யார்?

(A) District forest officer
மாவட்ட வன அலுவலர்

(B) Conservator of forest
வனபாதுகாவலர்

(C) PCCF
முதன்மை தலைமை வன பாதுகாவலர்

(D) Chief conservator of forest
தலைமை வனபாதுகாவலர்

41. To whom should a candidate apply for the alteration of the date of birth if the appointment is made in consultation with the Tamil Nadu Public Service Commission Under the provisions of the Tamil Nadu Government Servants Conditions of Services Act 2016?
தமிழ்நாடு அரசு ஊழியர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016- இன்படி, அரசு பணியாளர்கள் தேர்வாணையம் மூலம் நியமனம் செய்யப்பட்ட ஒருவரின் பிறந்த தேதியை மாற்றம் செய்ய யாருக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டும்?

(A) Appointing authority
நியமன அதிகாரிக்கு

(B) Head of Department
துறை தலைவருக்கு

(C) The Tamil Nadu Public Service Commission
தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணையத்திற்கு

(D) District Collector
மாவட்ட ஆட்சியருக்கு

42. What is the time limit for making an application to alter the date of birth after entering service Under the provisions of the Tamil Nadu Government Servants Conditions of Services Act 2016?
தமிழ்நாடு அரசு ஊழியர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-இன்படி, ஒரு அரசு பணியாளர் பணியில் சேர்ந்த பிறகு பிறந்த தேதியை மாற்றம் செய்ய எவ்வளவு காலக்கெடுவுக்குள் விண்ணப்பிக்க வேண்டும்?

(A) 2 years
2 ஆண்டுகள்

(B) 3 years
3 ஆண்டுகள்

(C) 5 years
5 ஆண்டுகள்

(D) 10 years
10 ஆண்டுகள்

43. What percentage of vacancies shall be reserved for ex-servicemen under the Special Rules for Tamil Nadu Basic Service?
தமிழ்நாடு அடிப்படை பணியாளர் சிறப்பு விதிகளின்படி முன்னாள் படைவீரர்களுக்கான இட ஒதுக்கீடு சதவீதம்?

(A) 5%
(B) 7%
(C) 10%
(D) 12%

44. What is the minimum driving experience required for candidates called from the Employment Exchange for driving jobs under the Special Rules for Tamil Nadu Basic Service?
தமிழ்நாடு அடிப்படை பணியாளர் சிறப்பு விதிகளின்படி ஓட்டுநர் பணிக்கு வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரரின் குறைந்தபட்ச ஓட்டுநர் அனுபவம் எவ்வளவு இருக்க வேண்டும்?

(A) 1 year
ஆண்டு
(B) 2 years
ஆண்டுகள்
(C) 3 years
ஆண்டுகள்
(D) No experience required
அனுபவம் தேவை இல்லை

45. Under the provision of Special Rules for Tamil Nadu Basic Service which are family members eligible for appointment under compassionate grounds without going through the Employment Exchange?
தமிழ்நாடு அடிப்படை பணியாளர் சிறப்பு விதிகளின்படி வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் அல்லாமல் கருணை அடிப்படையில் நியமிக்கக்கூடிய குடும்ப உறுப்பினர்கள் யார்?

(A) Only sons
மகன்கள் மட்டும்
(B) Any relatives
ஏதேனும் உறவினர்கள்
(C) Wife/husband/son/daughter of a deceased or medically invalidated government servant
பணிக்காலத்தில் இறந்த அல்லது மருத்துவ காரணமாக ஓய்வு பெற்ற அரசு ஊழியரின் மனைவி / கணவர் / மகன் / மகள்
(D) All family members and dependents of a deceased or medically invalidated government servant
இறந்த அல்லது ஓய்வு பெற்ற அரசு ஊழியரின் அனைத்து உறவினர்களும்

46. Who must be informed if an appointment is made without Employment Exchange nomination under the Special Rules for Tamil Nadu Basic Service?
தமிழ்நாடு அடிப்படை பணியாளர் சிறப்பு விதிகளின்படி, வேலைவாய்ப்பு அலுவலகத்தின் பரிந்துரை இல்லாமல் நியமனம் செய்யப்படும் போது யாருக்கு தகவல் அளிக்க வேண்டும்?

(A) District Collector
மாவட்ட ஆட்சியர்

(B) Tamil Nadu Public Service Commission
தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்

(C) Employment Exchange and superior
வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் உயர் அலுவலகம்

(D) Head of Department officer
துறை தலைவர்

47. Under the Special Rules of Tamil Nadu Basic Service, how should direct recruitment be initiated?
தமிழ்நாடு அடிப்படை பணியாளர் சிறப்பு விதிகளின்படி, நேரடி நியமனம் எப்படி துவக்கப்பட வேண்டும்?

(A) By publishing a newspaper advertisement
செய்தித்தாளில் விளம்பரம் வெளியிட்டு

(B) By conducting a departmental exam
துறைசார் தேர்வு நடத்தி

(C) By calling for a panel from the Employment Exchange
வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெயர் பட்டியல் கோரி

(D) By an open walk-in interview
நேரடி தேர்வின் மூலம்

48. Under the Special Rules for Tamil Nadu Basic Service, to be appointed as Office Assistant, the candidate must be able to:
தமிழ்நாடு அடிப்படை பணியாளர் சிறப்பு விதிகளின்படி, அலுவலக உதவியாளராக நியமிக்கப்படும் ஊழியருக்கு?

(A) Ride a bike
பைக் ஓட்டத் தெரிந்திருக்க வேண்டும்

(B) Use a computer
கணினி பயன்படுத்தத் தெரிந்திருக்க வேண்டும்

(C) Ride a bicycle
சைக்கிள் ஓட்டத் தெரிந்திருக்க வேண்டும்

(D) Type in Tamil
தமிழில் தட்டச்சு செய்யத் தெரிந்திருக்க வேண்டும்

49. To be eligible for appointment to Class IV posts, a candidate must qualify under the Special Rules for Tamil Nadu Basic Service:
தமிழ்நாடு அடிப்படை பணியாளர் சிறப்பு விதிகளின்படி, வகுப்பு IV பணியிடங்களுக்கு குறைந்த பட்ச தகுதி என்ன?

(A) Pass the 12th standard
12ம் வகுப்பு தேர்ச்சி

(B) Pass the 10th standard
10ம் வகுப்பு தேர்ச்சி

(C) Be able to read and write in Tamil
தமிழில் வாசிக்கவும் எழுதவும் தெரிந்திருக்க வேண்டும்

(D) Pass a departmental exam
துறைசார் தேர்வு தேர்ச்சி

50. What is the maximum age limit for direct recruitment under the special rules for Tamil Nadu Basic Service (other than classes I and II) in resealed categories
தமிழ்நாடு அடிப்படை பணியாளர் சிறப்பு விதிகளின் படி, நேரடி நியமன பணியிடங்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு (வகுப்பு I மற்றும் II அல்லாத) என்ன?

(A) 25 years
25 வயது

(B) 28 years
28 வயது

(C) 32 years
32 வயது

(D) 35 years
35 வயது

51. What is the reason for reservation policy in Tamil Nadu government jobs?
தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீட்டின் முக்கிய நோக்கம் என்ன?

(A) To stream line administrative process in government department
அரசு துறைகளை முறைபடுத்துவது

(B) To provide temporary solution for unemploynment
தற்காலிக தீர்வாக வேலையில்லா திண்டாட்டத்தை நீக்குதல்

(C) To act a tool for social justice by rectifying historical worry and equitable representative
வரலாற்று ரீதியான தாழ்வுநிலைகளை சரிசெய்யவும் சமமான பிரதிநிதித்துவத்தை அளிக்கவும்

(D) To provide industrial growth by favoring specific community
தொழிற்துறை முன்னேற்றத்திற்கு குறிப்பிட்ட சமூகத்தை வாய்பளித்தல்

52. In case of absorption due to post abolition or retrenchment, seniority is fixed based on the Special Rules for Tamil Nadu Basic Service:
தமிழ்நாடு அடிப்படை பணியாளர் சிறப்பு விதிகளின்படி, பணியிடங்களை நீக்குதல், ஆட்குறைப்பு காரணமாக பணியாளர்கள் வேறு துறையில் இணைக்கப்பட்டால், பணி மூப்பு எதன் அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படும்?

(A) Date of joining the new department
புதிய துறையில் சேர்ந்த தேதி

(B) Recommendation of the appointing authority
நியமன அலுவலரின் பரிந்துரை

(C) Date of regular appointment in the former department
பழைய துறையில் மேற்கொண்ட பணி நியமன தேதி

(D) Date of confirmation
பணி உறுதிப்படுத்தப்பட்ட தேதி

53. Generally, Jamabandi conducted by
பொதுவாக ஜமாபந்தி யாரால் நடத்தப்படும்

(A) Thasildhar
வட்டாட்சியர்

(B) District Collector
மாவட்ட ஆட்சியர்

(C) Village Administrative Officer
கிராம நிர்வாக அலுவலர்

(D) None of the above
ஏதுமில்லை

54. Who is empower to transfer of land from poramboke to ayan?
புறம்போக்கு நிலத்தை ayan நிலமாக மாற்ற, அதிகாரம் படைத்தவர்?

(A) District Collector
மாவட்ட ஆட்சியர்

(B) Thasildhar
வட்டாட்சியர்

(C) Village Administrative Officer
கிராம நிர்வாக அலுவலர்

(D) Deputy Thasildhar
துணை வட்டாட்சியர்

55. The Attendance Register will be closed at
அலுவலக வருகைப் பதிவேடு முடிக்கப்படும் நேரம்

(A) 10.30 AM

(B) 10.10 AM

(C) 10.15 AM

(D) 10.00 AM

56. The Government Office system described by the system of
__________ இன் படி அரசு அலுவலகம் முறைப்படுத்தப்பட்டு வருகிறது.

(A) Tottanham's System
தோட்டன்ஹம் முறை

(B) Number System
எண் முறை

(C) Office System
அலுவலக முறை

(D) Government System
அரசு முறை

57. All tapals received in Government Office should be entered first in which register?
அரசு அலுவலகத்தில் பெறப்படும் அனைத்து தபால்களும் முதலில் எந்த பதிவேட்டில் பதிய வேண்டும்?

(A) Personal Register
தன்பதிவேடு

(B) Brought Forward Register
முன்கொணர் பதிவேடு

(C) Distribution Register
பகிர்மான பதிவேடு

(D) Fair Copy Register
சுத்த நகல் பதிவேடு

58. In Government Office, Personal Register will be maintained by
தன்பதிவேடு அரசு அலுவலகங்களில் யாரால் பராமரிக்கப்படுகிறது?

(A) Superintendent
கண்காணிப்பாளர்

(B) Section Head
பிரிவு தலைவர்

(C) Office Head
அலுவலக தலைவர்

(D) Each section Clerk
ஒவ்வொரு பிரிவு எழுத்தர்

59. Who is responsible for the correctness of entries and of balance in stamp account?
அஞ்சல் வில்லை கணக்கு இருப்பு விவரம் மற்றும் சரிபார்த்தலுக்கான பொறுப்பு?

(A) The Superintendent Fair Copying Section
சுத்த நகல் பிரிவு கண்காணிப்பாளர்

(B) Clerk
எழுத்தர்

(C) Office Head
அலுவலக தலைவர்

(D) Record Clerk
பதிவறை எழுத்தர்

60. Suit papers should be initially dealt with
நீதிமன்ற வழக்குகள் சம்பந்தப்பட்ட கோப்புகள் ஆரம்பத்தில் எந்த பதிவேட்டில் பதியப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்?

(A) Personal Register
தன்பதிவேடு

(B) Brought Forward Register
முன்கொணர் பதிவேடு

(C) Suit Register
வழக்குகள் தனிப்பதிவேடு

(D) Fair Copy Register
சுத்த நகல் பதிவேடு

61. "Government" will be treated as ________ noun in drafting and writing notes.
அரசு என்ற வார்த்தை குறிப்பேடுகளில் எழுதும்பொழுது ________ என்று பொருள்படும்.

(A) Singular
ஒருமை

(B) Plural
பன்மை

(C) Type
வகை

(D) None of these
மேற்கண்ட ஏதுமில்லை

62. The Note File will be numbered in ________ ink.
குறிப்பு கோப்பின் பக்கங்கள் ________ மையினால் எண்ணிட வேண்டும்.

(A) Red
சிவப்பு

(B) Blue
நீலம்

(C) Black
கருப்பு

(D) Green
பச்சை

63. At the head of every draft letter, proceedings or memorandum, the ________ must be written.
வரைவு கடிதம், நடவடிக்கை குறிப்புகள் அல்லது குறிப்பாணை ஒவ்வொன்றின் வரைவின் தலைப்பிலும் அதன் ________ குறிப்பிட வேண்டும்.

(A) Title
தலைப்பு

(B) Reference
குறிப்பு

(C) Subject
பொருள்

(D) None of these
மேற்கண்ட ஏதுமில்லை

64. "L. Dis" means it can destroyed after ________ year.
"L. Dis" என்பது கோப்புகளை ________ வருடத்திற்கு பிறகு அழிக்க முடியும்.

(A) 1
(B) 2
(C) 3
(D) 5

65. "K. Dis" means it can destroyed after ________ year.
"K. Dis" என்பது கோப்புகளை ________ வருடத்திற்கு பிறகு அழிக்க முடியும்.

(A) 1
(B) 2
(C) 3
(D) 5

66. ________ will be entered in Security Register.
________ காப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.

(A) Valueless
மதிப்பற்றவை

(B) Attendance
வருகை

(C) Cash
பணம்

(D) Tappal
தபால்

67. To perform which following ceremony, members of the staff on application may be permitted to attend late in the morning or to leave office early in the evening by not more than $1\frac{1}{2}$ hours

அரசு ஊழியர்கள் கீழ்கண்ட எந்த விழாவிற்கு விண்ணப்பத்தின் பேரில் காலையில் $1\frac{1}{2}$ மணி நேரத்திற்கும் மிகாமல் தாமதமாக அலுவலகம் வரவும் அல்லது மாலையில் $1\frac{1}{2}$ மணி நேரத்திற்கு முன்னதாக அலுவலகத்தை விட்டு செல்வதற்கும் அனுமதிக்கப்படுகிறது?

(A) Lunar eclipse
சந்திர கிரகணம்

(B) Sister's Marriage
சகோதரி திருமணத்திற்கு

(C) Birthday of his son
மகன் பிறந்த நாளுக்கு

(D) Sumangali pooja
சுமங்கலி பூஜைக்கு

68. Personal Register checking is the primary duty of
தன்பதிவேடு தணிக்கை யாருடைய முதன்மை கடமை?

(A) Head of Office
அலுவலக தலைமை

(B) Section head
பிரிவு தலைமை

(C) Senior Assistant
முதுநிலை உதவியாளர்

(D) None of these
இதில் ஏதுமில்லை

69. Who is responsible for examining stock file at frequent intervals?
இருப்பு கோப்பினை குறிப்பிட்டை இடைவெளியில் யார் ஆய்வு செய்ய வேண்டும்?

(A) Senior Assistant
முதுநிலை உதவியாளர்

(B) Office Head
அலுவலக தலைமை

(C) Section Head
பிரிவு தலைமை

(D) None of these
இதில் ஏதுமில்லை

70. Administrative Report may be destroyed after a period of ________ years.
________ ஆண்டுகளுக்கு பிறகு நிர்வாக அறிக்கை அழிக்கப்படலாம்.

(A) 2

(B) 1

(C) 5

(D) 10

71. The first forest Research report of Madras presidency released in the year
முதல் மெட்ராஸ் மாகாண வன ஆராய்ச்சி அறிக்கை வெளியிடப்பட்ட ஆண்டு.

(A) 1882

(B) 1919

(C) 1900

(D) 1924

72. In Government office, Loan Register may be destroyed after ________ years.
அரசு அலுவலகங்களில் கடன் வழங்கும் பதிவேடு ________ ஆண்டுகளுக்கு பிறகு அழிக்கப்படலாம்.

(A) 20
(B) 30
(C) 10
(D) 15

73. Suit will be arranged according to their years must come ________ the number of Original Suit.
உரிமையியல் வழக்குகளை அட்டவணை செய்யும் போது, வருடம் வழக்கு எண்ணிற்கு ________ குறிப்பிட வேண்டும்.

(A) Before
முன்னர்
(B) After
பின்னர்
(C) Middle
இடையில்
(D) None of these
இதில் ஏதுமில்லை

74. Arrear Lists pendency should be prepared in
நிலவை பட்டியல் ________ -இல் தயார் செய்ய வேண்டும்.

(A) Form VII
படிவம் VII
(B) Form V
படிவம் V
(C) Form VIII
படிவம் VIII
(D) Form VI
படிவம் VI

75. Security Register will be maintained in
காப்பு பதிவேடு பராமரிக்கப்பட வேண்டிய படிவம்

(A) Form XV of Appendix B
(B) Form XV of Appendix C
(C) Form XV of Appendix D
(D) Form XV of Appendix A

76. Under the Fundamental Rule of Tamil Nadu, rule 54(1), when a government servant is reinstated after dismissal, removal, or compulsory retirement, the competent authority must make a specific order regarding:
தமிழ்நாடு அடிப்படை விதி 54(1) படி, பணிநீக்கம், பணி அகற்றுதல் அல்லது கட்டாய ஓய்வு பெற்ற அரசு ஊழியர் மீண்டும் பணியில் அமர்த்தப்படும்போது, உரிய அலுவலர் கீழ்கண்டவற்றில் எதை கருத்தில் கொண்டு உரிய உத்தரவை வழங்க வேண்டும்?

(A) His pension benefits
ஓய்வூதிய நன்மைகள்

(B) His future promotions
எதிர்கால பதவி உயர்வுகள்

(C) Pay and allowances for the period of absence and whether it is to be treated as duty
பணி இழப்புக் காலத்திற்கான சம்பளம் மற்றும் அந்த காலம் பணிக்காலமாகக் கருதப்படுமா என்பது குறித்து

(D) Transfer to a different department
வேறு துறைக்கு மாற்றம்

77. What happens to the past service of a Government servant who is dismissed or removed as per the Fundamental Rules of Tamil Nadu, Rule 52-A?
தமிழ்நாடு அடிப்படை விதி 52-A படி, பணிநீக்கம் அல்லது பணி அகற்றுதல் செய்யப்பட்ட அரசு ஊழியரின் முந்தைய சேவை என்னாகும்?

(A) It is carried forward
தொடரப்படுகிறது

(B) It is forfeited
ஒதுக்கப்படுகிறது

(C) It is considered for pension
ஓய்வூதியத்திற்கு கருதப்படுகிறது

(D) It is counted for seniority
மூப்பில் கணக்கிடப்படுகிறது

78. As per the Fundamental Rule of Tamil Nadu, Rule 50, deputation of a Government servant outside India requires:
தமிழ்நாடு அடிப்படை விதி 50 படி, இந்தியாவிற்கு வெளியே அரசு ஊழியர் மாற்றுப்பணியில் பணிபுரிய யாருடைய ஒப்புதல் பெற வேண்டும்?

(A) Approval of the State Government
மாநில அரசின் முன்ஒப்புதல்

(B) Approval of the Department Head
துறைத் தலைவர் ஒப்புதல்

(C) Previous approval of the Central Government
மத்திய அரசின் முன்ஒப்புதல்

(D) Recommendation of the Selection Committee
தேர்வு குழுவின் பரிந்துரை

79. Who shall bear the cost of passages from and to India in case of deputation while on leave as per the Fundamental Rules of Tamil Nadu, Rule 51?
தமிழ்நாடு அடிப்படை விதி 51 படி, விடுப்பில் இருக்கும் ஒரு அரசு பணியாளர் வெளிநாட்டில் மாற்றுப்பணிக்கு செல்லும் மற்றும் திரும்பும் செலவுகளை யார் ஏற்க வேண்டும்?

(A) State Government
மாநில அரசு

(B) Central Government
மத்திய அரசு

(C) Ministry of External Affairs
வெளியுறவுத் துறை

(D) The Government servant himself
அரசு ஊழியர்

80. Under the Fundamental Rule of Tamil Nadu, Rule 48-A, a Government servant cannot do which of the following without permission?
தமிழ்நாடு அடிப்படை விதி 48-A படி, அரசு ஊழியர் உரிய அனுமதி பெறாமல் கீழ்கண்ட எந்த பணியை செய்ய இயலாது?

(A) Publish a research paper
ஆய்வுக் கட்டுரை வெளியிடுதல்

(B) Apply or permit others to apply for a patent
தாமாகவோ அல்லது பிறர் மூலமாகவோ காப்புரிமத்திற்கு விண்ணப்பித்தல்

(C) Present at a technical seminar
தொழில்நுட்ப கருத்தரங்கில் பங்கேற்பது

(D) None of these
மேற்படி ஏதுமில்லை

81. Under the provisions of the Fundamental Rules of Tamil Nadu, a reward sanctioned for services related to customs and excise laws can be:
தமிழ்நாடு அடிப்படை விதிகளின் படி, சுங்க மற்றும் வரிவிதிப்பு சட்டங்களின் கீழ் ஒரு சேவைக்காக பெறப்படும் பரிசு:

(A) Accepted only after retirement
ஓய்வு பிறகு மட்டுமே ஏற்கக்கூடியது

(B) Retained without special permission
சிறப்பு அனுமதி இல்லாமல் வைத்துக் கொள்ளக்கூடியது

(C) Donated to the welfare fund
பொது நலநிதிக்கு அளிக்க வேண்டும்

(D) Refused compulsorily
கட்டாயமாக மறுக்கப்பட வேண்டும் அளிக்கவேண்டும்

82. As per the Fundamental Rules of Tamil Nadu, a government servant may accept without section support of office head the paper setter work offered by:
தமிழ்நாடு அடிப்படை விதிகளின் படி, அரசு ஊழியர் எந்த நிறுவனத்தால் வழங்கப்படும் கேள்வித்தாள் தயாரிப்பு பணியை துறை தலைவர் அனுமதியின்றி ஏற்கலாம்?

(A) Private universities
தனியார் பல்கலைக்கழகங்கள்

(B) A foreign board
வெளிநாட்டு கல்வி வாரியம்

(C) Tamil Nadu Public Service Commission
தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்

(D) Coaching institutes
பயிற்சி மையங்கள்

83. Under the provisions of the Fundamental Rules of Tamil Nadu, if a Government servant refuses the allotment of Government quarters, House Rent Allowance will:
தமிழ்நாடு அடிப்படை விதிகளின் படி, அரசு ஊழியருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அரசு குடியிருப்பினை அரசு ஊழியர் நிராகரித்தால் வீட்டு வாடகைப் படியானது,

(A) Be continued for 3 months
3 மாதங்கள் தொடர்ந்து வழங்கப்படும்

(B) Be reduced by 50%
50% குறைக்கப்படும்

(C) Not be admissible from the date of allotment
குடியிருப்பு ஒதுக்கப்பட்ட தேதியிலிருந்து வீட்டு வாடகைப்படி வழங்க இயலாது

(D) Be allowed
வழங்கப்படும்

84. The provisions of the Fundamental Rules of Tamil Nadu, until what maximum period can accommodation at the old station be retained under the permission?
தமிழ்நாடு அடிப்படை விதிகளின் படி, பணிமாறுதல் செய்யப்பட்ட ஒரு அரசு பணியாளர் பழைய இடத்தில் உள்ள அரசு குடியிருப்புகளை எத்தனை மாதங்கள் அதிகபட்சமாக வைத்து கொள்ள அனுமதி உண்டு?

(A) 3 months
3 மாதங்கள்

(B) 12 months
12 மாதங்கள்

(C) 6 months
6 மாதங்கள்

(D) 1 month
1 மாதம்

85. Who fixed the Concessional Rent under the Fundamental Rules of Tamil Nadu?
தமிழ்நாடு அடிப்படை விதிகளின் படி, சலுகை வாடகைப்படி யாரால் நிர்ணயிக்கப்படுகிறது?

(A) District Collector
மாவட்ட ஆட்சியர்

(B) Head of Department
துறைத் தலைமை

(C) Government
அரசு

(D) None of these
இவற்றில் ஏதுமில்லை

86. Who is responsible for fixing the economic rent for Government quarters as per the Fundamental Rules of Tamil Nadu?
தமிழ்நாடு அடிப்படை விதிகளின் படி, அரசு குடியிருப்புகளுக்கான பொருளாதார வாடகையை யாரால் நிர்ணயிக்கப்படுகிறது?

(A) District Collector
மாவட்ட ஆட்சியர்

(B) Housing Board Chairman
தலைவர், வீட்டுவசதி வாரியம்

(C) Officers authorized by the Government
அரசு அங்கீகரித்த அலுவலர்கள்

(D) Director of Town and Country Planning
நகரத் திட்டமிடல் இயக்குநர்

87. In which section Classification of Government Servant under the Fundamental Rules of Tamil Nadu
தமிழ்நாடு அடிப்படை விதியின் எந்த பிரிவின் கீழ் அரசு ஊழியர்கள் வகைப்படுத்தப்படுகின்றனர்?

(A) 9-A
(B) 9-B
(C) 9-C
(D) 9-D

88. An allowance granted to a Government servant to cover the expenses which he incurs in travelling in the interests of the public service is called
அரசுப் பணியின் பொருட்டு பயணம் மேற்கொள்ளும் அரசுப் பணியாளருக்கு வழங்கப்படும் படி

(A) Travelling Allowance
பயணப்படி

(B) Subsistance Allowance
பிழைப்பூதியம்

(C) Special Pay
சிறப்பூதியம்

(D) Personal pay
தனி ஊதியம்

89. Under the Fundamental Rules of Tamil Nadu section 10, physical fitness certificate should be submitted by which prescribed form as follows
தமிழ்நாடு அடிப்படை விதி பிரிவு 10-இன் கீழ் கீழ்கண்ட எந்த படிவத்தில் உடல் தகுதி சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும்?

(A) Annexure I-A
(B) Annexure II-A
(C) Annexure I-B
(D) Annexure II-B

90. Father of Modern forestry in British India was
நவீன வனவியலின் தந்தை என பிரிட்டிஷ் இந்தியாவில் அழைக்கப்பட்டார்.

(A) Dr. Brandis
Dr. பிராண்டிஸ்

(B) H.F.C. Cleghorn
H.F.C. கிளேகான்

(C) C.E.C. Fishcher
C.E.C. பிஸ்ஸர்

(D) C.C. Wilson
C.C. வில்சன்

91. First TamilNadu order officer served as a director general of forest and also as special secretary to government of India.
தமிழ்நாட்டில் இருந்து டைரக்டர் ஜனரல் பாரஸ்ட் மற்றும் சிறப்பு செயலாளர் இந்திய அரசில் பணியாற்றிய வனதுறை அலுவலர்

(A) T. Jay dev I.F.S
T. ஜெய தேவ் I.F.S

(B) C.K. Sreedharan I.F.S.
C.K. ஷிதரன் I.F.S

(C) J.C. Kala I.F.S
J.C. காலா I.F.S

(D) K.A. Bhoja Sheety I.F.S
K.A. போஜாசெட்டி I.F.S

92. Which of the following offices is exempted from the application of the rule of reservation of appointments under the Tamil Nadu Ministerial Service Rules?
தமிழ்நாடு அமைச்சுப் பணியாளர்கள் விதிகளின்படி, அரசுப்பணி நியமனத்தில் இட ஒதுக்கீட்டு விதிகள் பொருந்தாத அலுவலகம் எது ?

(A) Office of the District Collector
மாவட்ட ஆட்சியர் அலுவகம்

(B) Office of the Comptroller, Governor's Household
மாநில கணக்காளர் அலுவலகம், ஆளுநர் இல்லம்

(C) Department of Forests
வனத்துறை

(D) Public Works Department
பொது பணித்துறை

93. Which of the following posts in the Health Services Department are exempt from the reservation under the Tamil Nadu Ministerial Service Rules?
தமிழ்நாடு அமைச்சுப் பணியாளர் விதிகளின்படி, சுகாதாரத் துறையில் இடஒதுக்கீட்டு விதிகளுக்கு விதிவிலக்கு வழங்கப்பட்ட பணியிடங்கள் எவை?

(A) Assistant Surgeons
உதவிச் சிகிச்சையாளர்கள்

(B) Pharmacists
மருந்தாளர்கள்

(C) Store-keepers (IV Grade), Linen- Keepers (III Grade), and Laundry Supervisors (III Grade)
பண்டகப் பொருள் பராமரிப்பாளர்கள் (நிலை IV), துணி பராமரிப்பாளர்கள் (நிலை III), சலவை மேற்பார்வையாளர்கள் (நிலை III)

(D) Staff Nurses
செவிலியர்கள்

94. In the category of Assistants, how is an appointment as full member determined under the Tamil Nadu Ministerial Service Rules?
தமிழ்நாடு அமைச்சுப் பணியாளர். விதிகளின் கீழ், உதவியாளர் பதவியில் முழு உறுப்பினருக்கான நியமனம் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது?

(A) Based on probation completion
பயிற்சி நிறைவு அடிப்படையில்

(B) Based on the merit list
திறமையின் அடிப்படையில்

(C) Based strictly on seniority
முதுநிலை அடிப்படையில் மட்டுமே

(D) Based on performance appraisal
செயல்திறன் மதிப்பீடு அடிப்படையில்

95. What is the unit for promotion to the post of Superintendent in the Forest Department under the Tamil Nadu Ministerial Service Rules?
தமிழ்நாடு அமைச்சுப் பணியாளர் விதிகளின் கீழ், வனத்துறையில் கண்காணிப்பாளர் பதவிக்கான பதவி உயர்வு எதன் அடிப்படையில் நடைபெறும்?

(A) Circle
மண்டலம் அளவில்

(B) Division
கோட்டம் அளவில்

(C) Entire Forest Department
வனத்துறை முழுமைக்கும்

(D) District
மாவட்டம் அளவில்

96. What is the total period of probation for a Forest Apprentice under the Tamil Nadu Forest Service Rules?
தமிழ்நாடு வனப் பணி விதிகளின்படி ஒரு வன பயிலாளருக்கான மொத்த தகுதிகாண் காலம் எவ்வளவு?

(A) 1 year
1 ஆண்டு

(B) 2 years
2 ஆண்டுகள்

(C) 3 years
ஆண்டுகள்

(D) 5 years
5 ஆண்டுகள்

97. If no vacancy officiating or substantive in the Department in the cadre of Rangers, what is the Forest Apprentice treated as under the Tamil Nadu Forest Service Rules?
வனச்சரக அலுவலர் பணியிடத்தில் காலிப்பணியிடம் இல்லாத போது வனப்பழகுநர்கள் எவ்வாறு கருதப்படுவார்?

(A) Forest Guard
வனக் காப்பாளர்

(B) Assistant
உதவியாளர்

(C) Forester
வனவர்

(D) Superintendent
கண்காணிப்பாளர்

98. As per the Tamil Nadu Forest Service Rules, who is the competent authority to transfer members of the service from one circle to another?
வனத்துறையில் வனப்பணியாளர்களை ஒரு வனமண்டலத்தில் இருந்து மற்றொரு வனமண்டலத்திற்கு பணியிடமாற்றம் செய்ய அதிகாரம் யாருக்கு உள்ளது?

(A) District Forest Officer
மாவட்ட வன அலுவலர்

(B) Conservator of Forests
வனப்பாதுகாவலர்

(C) Principal Secretary to the Government
அரசின் தலைமைச் செயலாளர்

(D) Principal Chief Conservator of Forests
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்

99. Under the provisions of the Tamil Nadu Forest Service Rules Transfers of Rangers from one division to another within a circle are made by:
வனத்துறையில் வனச்சரக அலுவலர்களை ஒரு மண்டலத்தில் உள்ள கோட்டங்களுக்கு இடையே பணிமாற்றம் செய்யும் அதிகாரம் யாருக்கு உள்ளது?

(A) Forest Secretary
வனத்துறை செயலாளர்

(B) District Forest Officer
மாவட்ட வன அலுவலர்

(C) Conservator of Forests
வனப்பாதுகாவலர்

(D) Principal Chief Conservator of Forests
முதன்மை தலைமை வனப் பாதுகாவலர்

100. The supply of carts or other conveyance to Government Officers is the duty of Village Head man as per
அரசு அலுவலர்களுக்கு வண்டிகள் மற்றும் இதர போக்குவரத்து உதவிகளை செய்ய வேண்டியது எதன்படி கிராம தலைவரின் பொறுப்பாகும்?

(A) B.S.O-112
வா.நி.ஆ. 112

(B) B.S.O-113
வா.நி.ஆ. 113

(C) B.S.O-114
வா.நி.ஆ. 114

(D) B.S.O-115
வா.நி.ஆ. 115